1974 மார்ச் 19]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவர்களுடைய அடிப்படைச் சம்பளத்தில் பத்து சத வீதம் வீட்டு வாடகையாக வசூலிக்கும் நிலைமை இருந்தது. இரண்டாவது சம்பளக் கமிஷன் பரிந்துரையின் மீது சம்பள உயர்வுக்குப் பிறகும் அதே பத்து சதவீத அடிப்படையிலே அந்த வீட்டு வாடகை வசூலிப்பது என்ற நிலை ஏற்பட்டது. அதற்குப் பிறகு, அவர்கள் கொடுத்திருக்கும் சில முறையீடுகளின் அடிப்படையில் அரசு இவைகளைச் சீரமைப்பு செய்வதற்கு இயலுமா என்பதைப்பற்றி யோசித்து வருகிறது.

கன்னிமாரா நூல் நிலையம்.

*493 வினா—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னிமாரா நூல் நிலையத்தில் வேலை நேரத்தை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, நூலகங்கள் பொதுவாக காலை 8 மணியிலிருந்து இரவு எட்டு மணி வரைக்கும் திறந்திருக்கிறன. ஆனால், கன்னிமாரா நூலகம் அம்மாதிரி இல்லை. உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் அங்கு போய்ப் பயனுறுவதற்கான வசதி ஏற்படுகிற வகையில் அந்த நூலகத்தின் வேலை நேரத்தை மாற்றியமைக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, காலை 8 மணியிலிருந்து மாலை 5-30 வரை கன்னிமாரா நூலகம் இயங்கி வருகிறது. இதனுடைய நேரத்தை இன்னும் கூட்ட வேண்டுமென்றால் கூடுதலான ஊழியர்களைப் போடவேண்டும். இப்போதே புதிய கட்டடம் ஒன்று கட்டி பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் திறந்துவைக்கப்பட்டிருக்கிறது. போதுமான அளவுக்கு நிதி நிலை இடம் கொடுக்காததால், அதற்கே போதுமான ஊழியர்கள் நியமிக்கப்படவில்லை. சென்னையில் பல்வேறு நூலகங்கள் இயங்கிவருவதால், பல்வேறு நேரங்களில் அவை இயங்கினால் பொதுமக்களுக்குப் பயன்படுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்ற காரணத்தினால், கன்னிமரா நூலகம் காலை 8 மணியிலிருந்து மாலை 5-30 வரையில் இயங்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, பகலில் வேலை பார்த்துவிட்டுவந்து படிக்கிறவர்களுக்கும், மாணவர்கள் கல்வி நிலையங்கள் விட்டு வந்து படிக்கிறவர்களுக்கும் எற்ற விதத்தில் இந்நூலகத்தின் நேரம் அமையவில்லை. ஆகவே, இரவு 8-30 வரையில் இந்நூலகம் இயங்கும் வண்ணம் நேரத்தை மாற்றியமைப்பதற்கு அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நேரத்தை வேண்டுமென்றால் பிரித்து அமைக்கலாம். ஆனால், அப்படிப்பட்ட முறையீடு எதும் வரவில்லை. இதையும் நீட்டிக்க வேண்டுமென்றால், கூடுதலான ஊழியர்களை நியமிக்க வேண்டிவருகிறது. கூடுதலான ஊழியர்களை நியமிப்பதற்கு நிதி நிலை இடம் தரவில்லை. சென்னையில் உள்ள பல் வேறு நூலகங்கள் இரவு எட்டரை மணி வரையிலும் இயங்குகின்றன. மாவட்ட மைய நூலகம் போன்றவை அவ்வாறு இயங்குவதால் அவற்றைப் பயன்படுத்துவதற்கும் நாள் முழுவதும் பயன்படுத்துவதற்கு இந்த நூலகம் பயன்படும் என்ற முறையில் நேரங்களில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, படிப்பதற்கு அமைதியான நேரம் இரவு நேரம் தான். பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் இரவு நேரத்தைத்தான் படிப்பதற்குப் பயன்படுத்திக்கொண்டு 1 மணி, 2 மணி, 3 மணி வரை கூட படித்துக்கொண்டிருந்தார்கள். ஆகவே, இரவு நேரத்தில் ஒரு நேரத்தை ஒதுக்கி அங்கே ஏற்பாடு செய்யப்படுமா, ஷிப்டு முறையிலாவது செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, எல்லோருமே அறிஞர் அண்ணா போன்று இருக்க முடியாது. எல்லோரும் அந்த மாதிரி நேரத்தை வைத்துக்கொள்ள முடியாது. நேரம் ஒதுக்கிக் கொடுத்து விடுவதாலேயே எல்லோரும் அறிஞர் அண்ணா மாதிரி ஆகிவிடமாட்டார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு இயல்பு இருக்கும். இங்கேயிருக்கிற பல் வேறு நூல் நிலையங்கள், பல்வேறு நேரங்களில் இயங்குவதால் எல்லோருக்கும் எல்லா நேரங்களிலும் பயன்படுகிற மாதிரி அமைந்து இருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Connemara Library is one of the best libraries ; it is not only an ordinary library, but it is a reference library also ; so many people go there after office hours, after 5 O'clock and after the Legislature is over, Members also go there, but the time there is very little and reference work is difficult to do. Therefore, time has to be extended in view of the importance to people of this library. The light arrangement there is not good and we are not able to take copies. Further, the staff there is also not adequate. Because I am a member there, I know the position. A lot of books are heaped up and it is very difficult to sort them out. Therefore, will the Hon. Minister for Education and Tourism be pleased to make a special investigation of all these matters and set right the defects.

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். போதுமான ஊழியர்கள் இல்லை. ஊழியர்களைக் கூடுதல் செய்ய வேண்டுமானால் நிதிநிலை இடம் தரவில்லை. ஊழியர்களைக் கூடுதலாகப் போட வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. 8 மணி முதல் $5\frac{1}{2}$ மணி வரையில், $9\frac{1}{2}$ மணி நேரம் அந்த நூலகம் மக்களுக்குப் பயன்படுகிறது. மக்களிடமிருந்து முறையீடு வருமானால்,

1974 மார்ச் 19]

அந்த நேரத்தைப் பிரித்து ஒரு குறிப்பிட்ட நேரம் காலையிலும், பிறகு மாலை 5 மணிக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட நேரமும் என்ற வகையில் செய்வதற்கு ஆலோசிக்கலாம், அதுபற்றி முறையீடு வந்தால்தான் அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, இந்த நூல் நிலையத்திற்கு வசதி படைத்தவர்கள் மட்டுமே சென்று புத்தகம் வாங்கிப் படிக்கும் நிலை இருக்கிறது. ஆக, வசதி இல்லாதவர்கள் சென்று படிக்கும் நிலையை உருவாக்க இந்த கன்னிமரா நூல் நிலையத்தை சென்னையின் மையப் பகுதியில் அமைத்தால் நலமாக இருக்கும் என்று கருதப்படுகிறதே, இதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த நூலகம் கூடுமான வரையில் சென்னையின் மையப் பகுதியில்தான் இருக்கிறது. வசதி படைத்தவர்கள் தான் செல்ல முடியும், மற்றவர்கள் செல்ல முடியாது என்பதல்ல. அங்கேயிருந்து புத்தகங்கள் எடுத்துச் செல்ல விரும்புகிறவர்களிடமிருந்து எச்சரிக்கை டிபாசிட்டாக ரூ. 5 அல்லது ரூ. 10*-ம் வசூலிக்கிறார்கள். அதுவும் திருப்பி வாங்கிக் கொள்ளக்கூடிய தொகை தான். அந்த நூலகத்தை எல்லோரும் போய்ப் பயன்படுத்தி கொள்ளலாம். கன்னிமாரா லைப்ரரி இருக்கும் கட்டடத்தைப் போல் இன்னொரு கட்டடம் கிடைப்பது என்பது அரிது. அந்தக் கட்டடம் இருக்கிற இடம், சென்னை நகரத்தின் விரிவான பகுதியைப் பார்க்கிறபோது, நகரின் மைய இடமாகத்தான் கருதவேண்டும்.

திருப்பூர் ஒன்றியப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள்.

*494 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மங்கலம், அய்யங்காளி பாளையம், விஜயபுரம், பெருமாநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான ஆய்வுக்கூடங்கள் உள்ளனவா ?

(இ) இல்லை எனில், காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் மங்கலம் அரசு (கழக) உயர்நிலைப் பள்ளியில் மட்டும் அறிவியல் ஆய்வுக்கூடம் உள்ளது.

---

* 528-ம் பக்கத்திலுள்ள மாண்புமிகு அமைச்சரின் திருத்த அறிக்கையைக் காண்க.